# Principal District Munsif Court, Sankarankovil.

தேதி : 03.09.2024

அ.வ.எண்.177/2016

வா.சா.1 -செல்வம், க/பெ.குமார்

<u>வா.சா.1 மீண்டும் ஆஜர் சத்தியபிரமாண வாக்குமூலத்தின்பேரில் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> :-

1. எனது தகப்பனார் பெயர் காத்தப்ப தேவர், அம்மா பெயர் மீனாட்சி ஆகும். எனது தாய், தகப்பனாருக்கு நான் ஒரு பெண் குழந்தை ஆவேன். மற்ற 5 பேரும் ஆண்வாரிசுகள் ஆவர். எனது உண்மையான பெயர் மேரி செல்வமா என்றால் இல்லை செல்வம்தான். பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் எனது பெயர் மேரிசெல்வம் என சொல்லியுள்ளார்களா என்றால் சொல்லியுள்ளார்கள். ஆனால் எனது பெயர் செல்வம்தான். நான் சிஎஸ்ஐ சர்ச்சை சார்ந்தவர் என எதிர்வழக்குரையில் பிரதிவாதிகள் சொல்லியுள்ளார்கள். ஆனால் நான் சிஎஸ்ஐ சர்ச்சுக்கு போவதில்லை. எனது பெயர் செல்வம் என்பதை நிரூபிக்க ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆதார் அட்டை உள்ளது.

2. நான் இந்து மதத்திலிருந்து கிறிஸ்தவராக மாறிவிட்டதால் வழக்கு சொத்தில் எனக்கு பங்கு பாகம் கிடைக்கக்கூடியதில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது மாமனார் பெயர் வேதமணித்தேவர். வேதமணித்தேவர் என்பது கிறிஸ்துவ மதத்தைச் சார்ந்த பெயர் என்றால் சரியல்ல. எனக்கு ஒரு மகள், மூன்று மகன்கள் உள்ளார்கள். முதல் மகன் பெயர் தேவபிரிய ராஜ் என்றால் சரியல்ல, ராஜ் தான். நான் வழக்கிற்காக எனது பெயரையும், எனது குழந்தைகள் பெயரையும் தவறாக சொல்கிறேன் என்றும், நான் கிறிஸ்தவ மதத்தைச் சார்ந்தவர் என்றால் சரியல்ல. எனது தாயார் மீனாட்சி 15.02.1993 ல் இறந்துபோனார் என்றால் சரிதான். அவர் இறப்பதற்கு மூன்று நாட்களுக்கு முன்பாக தான் பிரதிவாதிகள் எழுதிவாங்கியுள்ளார்கள். எனது அம்மாவிற்கு எங்கு போனோம், என்ன எழுதிக்கொடுத்தோம் என தெரியாத நிலையில் எழுதிவாங்கியுள்ளார்கள். அவ்வாறு பிரதிவாதிகள் எழுதிவாங்கிய விபரம் எப்போது எனக்கு தெரியுமா என்றால் 2016 ல்தான் தெரியும்.

3. பிரதிவாதிகள் எழுதிவாங்கியதாக சொல்லும் விபரம் தெரிந்தபின்னர் தான் நான் வழக்கு போட்டேனா என்றால் ஆமாம். எனது மூத்த சகோதரர் செல்லச்சாமி மகன்கள் தான் 5 முதல் 8 பிரதிவாதிகள் என்றால் சரிதான். வேலுச்சாமித்தேவர் இறந்துவிட்டார் என்றால் சரிதான். வேலுச்சாமியின் வாரிசுகள் தான் 9 முதல் 15 பிரதிவாதிகள் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி சண்முகசுந்தரம் இறந்துவிட்டார் என்றால் சரிதான். அவரது வாரிசுகள் 16 முதல் 19 பிரதிவாதிகள் என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி முருகராஜ்

இறந்துவிட்டார் என்றால் சரிதான். அவரது மனைவியான முத்தாத்தாள் உயிரோடு உள்ளார் என்றால் சரிதான். அவருக்கு சௌந்தரி, மாலதி, சரவணன், மீனா ஆகிய குழந்தைகள் உள்ளார்கள் என்றால் சரிதான். அவர்களை நான் இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் அவர்கள் பாகத்திற்கு உரிய இடத்தை விற்றுவிட்டதால் அவர்களை கட்சி சேர்க்க வேண்டாம் என சொல்லிவிட்டார்கள், அதனால் சேர்க்கவில்லை.

4. 3 ம் பிரதிவாதியின் வாரிசுகள் எவ்வளவு இடத்தை விற்றுள்ளார்கள் என்றால் 13 ½ செண்ட்-ல் 6 செண்ட் விற்றுள்ளார்கள். தென்கடைசியில் மேல்கடைசியில் அவர்களுக்கு கிடைத்த பாகத்தை விற்றுள்ளார்கள் என்றால் சரிதான். அவ்வாறு கிரையம் கொடுத்து எவ்வளவு காலம் இருக்கும் என்றால் வழக்கு போட்டபின்னர் தான் கொடுத்தார்கள். எவ்வளவு நாள் என்பது சரியாக தெரியவில்லை. யாருக்கு விற்பனை செய்துள்ளார்கள் என்றால் சுரேஷ் என்ற நபருக்கு விற்றுள்ளார்கள். அந்த இடத்தில் சுரேஷ் என்ன செய்துள்ளார் என்றால் சுரேஷ் பாடுபட்டு விதைத்து மகசூல் எடுத்து வருகிறார்.

5. வேலுச்சாமித்தேவருக்கு ஒதுக்கப்பட்ட பாகத்தில் யார் பாடுபடுகிறார் என்றால் அவரது மனைவி தான் பாடுபடுகிறார். எவ்வளவு நாட்களாக பாடுபடுகிறார் என்றால் வழக்கு போட்ட பின்னர்தான் பாடுபடுகிறார். எனது சகோதரர் அனைவரும் தனித்தனியாக பிரிந்து பாடுபட்டுவருகிறார்கள் என்றால் சமீபத்தில்தான் பிரிந்தார்கள். 2 வது அட்டவணை சொத்து எனது தாயாருக்கு எப்படி பாத்தியப்பட்டது என்றால் எனது தகப்பனார் எனது தாயாரை திருமணம் முடித்தபோது நம்பிக்கைக்காக எழுதிக்கொடுத்த சொத்து ஆகும். அந்த சொத்து கிரையமாக எழுதிக்கொடுக்கப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. மனைவிக்கு கிரையம் கொடுக்கமுடியாது. 1 ம் தபசில் சொத்து முழுவதையும் எனது தகப்பனாரான காத்தமுத்து 1968 ம் ஆண்டில் பிரதிவாதிகளுக்கு நன்கொடை ஆவணமாக எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. அந்த நன்கொடை ஆவணத்தை ஒப்புக்கொண்டு இந்த பிரதிவாதிகள் சொத்துக்களை தனித்தனியாக அனுபவம் செய்துவந்தார்கள் என்றால் சரியல்ல.

6. எனக்கு 1981 ம் ஆண்டு திருமணம் நடந்தது. எனக்கு திருமணமான நாளிலிருந்து நான் எனது தகப்பனார் குடும்பத்தை விட்டு பிரிந்து வாழ்ந்துவருகிறேன் என்றால் சரியல்ல, எனது அப்பா, அம்மாவை பிரியாமல் தான் வாழ்ந்துவந்தேன். 3 ம் பிரதிவாதி முருகராஜ்க்கு கிடைத்து தனியாக அனுபவித்து வந்த சொத்தைப்பொறுத்து 05.05.1987 ல் பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணம் மூலம் கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. சொத்துக்குரிய பட்டாவானது 1 முதல் 4 பிரதிவாதிகள் பெயரில் இருந்துவருகிறது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ 1 பட்டாவானது 1 முதல் 4 பிரதிவாதிகள் பெயரில் உள்ளது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பட்டா ஆவணத்தில் இருந்து 1968 நன்கொடை ஆவணம் ஊர்ஜிதத்துக்கு வந்ததை நிரூபிக்கும் வகையில் உள்ளது என்றால் சரியல்ல.

7. பிரதிவாதிகள் 50, 60 ஆண்டுகளுக்கு மேலாக தனிப்பட்ட முறையில் அனுபவித்து வருவதை நான் பாகம் கோர இயலாது என்றால் சரியல்ல. கூட்டாகத்தான் அனுபவித்து வருகிறோம். வழக்கானது கால பிற்பாடாக தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் காலவரையறைச் சட்டத்தின்படி பாதிப்படைந்துள்ளது என்றால் சரியல்ல. வழக்குச்சொத்தினை நான் கூட்டாக அனுபவம் செய்வதாக கூறுவதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் கட்டியுள்ள நீதிமன்ற கட்டணம் குறைவானது என்றும், தவறான பிரிவின் கீழ் நீதிமன்றக்கட்டணம் செலுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. எனது வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. நான் அவசிய கட்சிக்காரர்களை வழக்குக்காக சேர்க்காததால் வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u> :** இல்லை.